**SAKTHI FOUNDATION**

**CAC [CONNECTING ADULTS TO THE CULTURE]**

**SYLLABUS: SEKILAR'S PERIYAPURANAM**

**Objective of the sessions:** To assist the adults to identify the inner strength, inner peace, real happiness trough ***BODY-MIND-INTELLECT-AWARENESS*** and finally living the fulfilled life of **ANANDHA** through ***CONSCIOUSNESS.***

**Foundation lessons**: **BMIAC CHART.**

1. Why we need to live?
2. Why I need to come to this session?
3. Assist the adults to first identify their body [sensorial organs], mind [emotions] and intellect [knowledge].
4. Assist them to explore what is happiness and duration of the happiness which has been enjoyed through BMI.
5. Slowly assist them to explore :
   a.] What is awareness? [Being aware about our body, disease, time, actions, surroundings]
   b.] What is consciousness? [Realizing others feelings, emotions, situations, needs by placing our self in their position.]

   ---

   Make the adults to realize and understand the difference between AWARENESS – CONSCIOUSNESS by various simple explanations and experiments.

   **TRIALS FOR AWARENESS:**

   1. Being aware about the future health like getting sugar, BP etc.
   2. Being aware about the seasons, climates, and children's needs, family's needs.
   3. Being aware about gatherings, issues may raise in the family, activities, family budget etc.

**TRIALS FOR CONSCIOUSNESS:**

1. Though you have headache, why you wake up and prepare your child's lunch?
2. Though you are suffering from lones why you help your friends financially?
3. Though you are sick why you assist your family for their actions?
4. Why you sacrifice your needs and fulfill others needs and make them happy?
5. What makes you to do the above actions?
6. What happens inside you when you perform those actions?
7. What is the difference between a help and service [Udhavi – kainkaryam]

**EXPERIMENT:**

1. Arrange a test tube filled with blue ink. [Blue represents true love] Mark the test tube with your name. Identify the test tube as yourself.
2. Arrange 5 other test tubes which are empty. Mark each one as your friend, stranger, animal, bird, tree\plant.
3. Pour the ink into all the 5 test tubes and feel that yourself as your love is present in every being.

**''Realizing the self in every being is consciousness.'' [**Try to bring this from the students]

March 26.3.2011

Karaikal Ammaiyar was presented.

Lecture was very interactive. Ammai's history was presented in a very practical way to the day to day situation so that people can feel the realize certain incidents. High light of the program me was the decoding concepts of devilish form, what made her to get the mango, how she got? Relation between the couple. What is the reason for her to relive herself from the bondage, her timings in self-analysis, her husband's situation, social condition, his second wedding, her life with her parents after departing from her husband, her education, her literary values, her travelling life, what is Kailasam? What is agora stage? Legend about Thiruvalangadu. What is the decoding of grave yard? What is ''Urthuva thandavam''? What is actually releasing our self from the birth cycle? Mental status of Ammai's parents.

CCC - CAC வகுப்புகள் ஏன் எதற்கு?
நம் முடி அழகாக இருக்கிறது.
நம் முகம் அழகாக இருக்கிறது.
இதை சதா பாதுகாக்க நாம் எத்தனை நடவடிக்கைகள் எடுக்கிறோம்?
அதே போல் தான் நம் ஒவ்வொருவரின் வாழ்க்கையிலும் ஒரு சந்தோஷம் இருக்கிறது. அந்த சந்தோஷம் வாழ்நாள் முழுதும் நீடிக்க சில வழிமுறைகள் நமக்குத் தெரிந்திருக்க வேண்டும். அதை உங்களுக்கு சொல்லித் தரும் வகுப்பே இந்த CCC - CAC வகுப்புகள் துணைசெய்கின்றன.

அம்மையார் உண்மையிலேயே கயிலாசம் சென்றாரா?
இன்று உடலில் பல நோய்கள் வந்தும், பலர் ஸ்திடமான நம்பிக்கையுடன் கயிலாச யாத்திரை மேற்கொள்கின்றனர். அக்காலத்தில் அம்மையார் மிக்க மெய்யுணர்வில் லயித்திருந்த நிலையில் பல ஊர்களுக்கும் பயணம் செய்து வடக்கில் கயிலாசத்திற்கும் சென்றிருக்கிறார். இன்று சமீபத்தில் அடியேன் சபரிமலையில் ஒரு வயதான மூதாட்டி இரு கைகளையும் ஊன்றி மலையின் மீது ஏறுவதைக் கண்டேன். உதவியையும் மறுத்து வைராக்யத்துடன் ஏறினார். அப்போது அஷ்டமா சித்திகளைப் பெற்ற அம்மையார் சிரசானத்தால் கயிலாசத்தை ஏற முடியும். இன்றும் பல திபெத்தியர்கள் கயிலாசத்தை விழுந்து விழுந்து நமஸ்காரம் செய்தபடியே வலம் வருகிறார்கள் என்பதையும் மனதில் கொள்ளவும்.

கயிலாசம் - விளக்கம்:
கயிலாசம் என்பது மிக உயர்ந்த மெய்யுணர்வு நிலை. அம்மையார் அந்நிலையை அடைந்து விட்டார் என்றும் அர்த்தம் கொள்க. அதுவும் உடலில் மிக உயர்ந்த இடம் நம் தலை. தலையில் தான் யோக சக்ரங்களில் உயர்ந்த சக்ரமான "சகஸ்ரதளம்" உள்ளது. அச்சக்ரத்தில் அவர் மிக உயர்ந்த மெய்யுணர்வை உணர்ந்து ஆனந்தமயமானார் என்றும் அர்த்தம் கொள்க.

"என்னைப் பெற்ற அம்மை"-விளக்கம்:
மெய்யுணர்வாகிய சிவத்தை யாரும் பெற்று எடுக்க முடியாது. ஆனால் மெய்யுணர்வாகிய சிவத்தை ஒவ்வொருவரும் தனக்குள் பெற்றுக் கொள்ள் முடியும், உணர முடியும், ஆனந்திக்க முடியும். "நானாகிய மெய்யுணர்வைத் தனக்குள் பெற்ற அம்மை" என்று பொருள்.

அம்மை - தான் பெற்ற சுகம் தன் குழந்தைக்கும் கிடைக்கப் பல தியாகங்கள் செய்பவள் தாய். தான் பெற்ற சிவானந்தத்தை இவ்வுலக மக்களும் பெற ஊர் ஊராகச் சென்று பாடி, பக்தியைப் பரப்பி நம்மை அரவணைத்ததால் காரைக்கால் புனிதவதி "அம்மை" ஆனார்.

**காரைக்கால் பேய்:**

அறுவறுக்கத் தக்க உருவம். அகோரித் தன்மை. தனக்குள் எவ்வித உலக பந்தங்களும் நுழையக் கூடாது என்று மிக்க விழிப்புணர்வுடன் இருக்கும் நிலை. சுடுகாட்டில் பேய் வாழும். உலகப் பற்றுக்கள் நீங்கிய நிர்மலமான மனதில் அமைதி இருக்கும். அதுவே ஆலங்காட்டு சுடுகாடு. அதில் பேயைப் போல் இறைவனாகிய சிவத்தை விடாது பிடித்துக் கொண்ட பேயாக அம்மை வாழ்ந்தார்.

பேய் உருவம் ஏன்?
மெய்யுணர்வில் சிவமகாவே மாறிய ஒருவருக்கு பயம் என்பதே இல்லை. தனது இளமை ஊரில் உள்ள ஆண்களுக்கு எவ்வித **சலனத்தையும் ஏற்படுத்தக் கூடாது என்பதற்காக அவர் தன்னை அறுவறுக்கத் தக்க வடிவில் மாற்றினார் என்று அர்த்தம் கொள்க.**

**மொழித் தொண்டு:**
**அம்மையார் பாடிய பதிகங்கள் ஐந்தாம் நூற்றாண்டைச் சேர்ந்தவை. திருமுருகாற்றுப் படைக்கு அடுத்து கிடைத்த பக்தி நூல் அவை. அந்தாதி இலக்கணம், சுடுகாட்டு வர்ணனை கொண்ட ”பரணி” இலக்கிய வகை ஆகியவற்றை முதன்முதலில் இவர் படைப்பில் காண்கிறோம். இசையுடன் கூடிய பாடல்கள் அவை.**

**2.3.2011 - Ramalinganagar CAC, Question asked by a senior citizen lady:**
**நாம் மெய்யுணர்வில் கலந்து சிவமாகிறோம், சமூகத்தை உள்ளது உள்ளபடி அரவணைத்துக் கொள்கிறோம். அப்படி என்றால் சமூகத்தில் சற்றும் மாறாத கெட்டவர்கள் இருக்கவே தான் செய்கிறார்கள். அதை நான் எப்படி ஏற்றுக் கொள்ள முடியும்?**

**SAME SENIOR CITIZEN'S ANOTHER QUESTION:**
**மெய்யுணர்வு என்பது ஒன்றே என்று நீங்கள் கூறும் போது ஏன் இத்தனை மதங்கள்? இந்து மதத்துக்குள்ளேயே ஏன் இத்தனை பேதங்கள்? விளக்கம் தேவை:**

**A VERY VALLID COMMENT UPON MOKSHA BY A LADY IN HER ABOVE 40IES:**
பிறப்பே இல்லாத மோக்ஷ நிலைக்கு செல்ல எனக்கு பயம். ஏன் என்றால் எனக்கு இன்னும் வீட்டில் பல கடமைகள் இருக்கின்றன. எனக்கு இப்போது வேண்டாம் அந்த பேறு.

---

PRESENTED ON 2.4.2011 IN RAMALINGANAGAR CAC
மெய்யுணர்வுக்கும் - பராசக்திக்கும் என்ன வேறுபாடு?
தங்கக்கட்டிக்கும் அதன் மூலம் செய்யப்பட்ட தங்கநகைக்கும் உள்ள வேறுபாடு தான் அது. தங்கம் என்பது மெய்யுணர்வு என்றால் அத்தங்கம் மாறுபட்டு உருவான நகையே பராசக்தி என்ற ப்ரபஞ்சசக்தி.
தங்கக்கட்டி நகையாக மாற எது காரணம்?
நம் மனதில் எழுந்த ஆசை அல்லது எண்ணம் தான் காரணம்.
இன்ன முறையில் இன்ன டிசைனில் ஒரு நகை செய்ய வேண்டும் என்ற அந்த எண்ணம் அல்லவா தங்கக்கட்டியை நகையாக மாற்றியது.
மெய்யுணர்வில் ”நான்-எனது-என் இஷ்டம்-என் ஆசைகள்” என்ற சலனங்களே சக்தியாக மாறுகின்றன. அப்போதே மெய்யுணர்வும் தோற்றமாற்றங்களை மேற்கொண்டு ப்ரபஞ்சசக்தியாக அதாவது அனைத்து தோற்றங்களாகவும் மாறுகின்றது. ப்ரபஞ்சத்தில் உள்ள அணு முதல்

திமிங்கலம் வரை இந்த ப்ரபஞ்ச சக்தியால் தான் நிறைந்திருக்கிறது.

சரி, அப்போது பிறப்பு என்பது என்ன?
எண்ணங்களே இல்லாமல் போவதே பிறப்பு அற்ற நிலை. தங்கம் கட்டியாகவே இருக்கிறது. அங்கு ஆசையோ எண்ணமோ இல்லை என்ற போது நகை எங்கு வரும்?

வேறு எடுத்துக்காட்டு தர முடியுமா?
மண் இருக்கிறது. குயவர் அதை அழகான பானையாக மாற்றுகிறார். மண் தான் மெய்யுணர்வு, பானை தான் சக்தி. குயவனின் எண்ணம் தானே பானையாக மாறியது. பானையை உடைத்து நன்றாக விழுதாக அரைக்கும் போது என்ன கிடைக்கும்? அதே மண் தானே?

- அது போல் எண்ணங்களும் ஆசைகளும் இல்லாத நிலையில் நாமாகிய பானை மீண்டும் மெய்யுணர்வாகிய மண்ணாக மாறுவதே வீடு பேறு அல்லது மோக்ஷம் ஆகும்.
-
- ஒன்று நன்றாக கவனிக்க வேண்டும், மண் தான் பானை ஆனதே ஒழிய, பானையில் இருந்து மண் வரவில்லை. மெய்யுணர்வில் இருந்து அதன் மற்றொரு வெளிப்பாடாக வருவதே சக்தி. அதனால் தான் சக்தியையே அதிகம் பல ரூபங்களில் வழிபடுகிறோம். மெய்யுணர்வை "சிவம்" என்கிறோம். இந்த பானை உடைந்து அரைபட்டு மண்ணாக மாறுவதே மோட்சம், அதையே "சிவசக்தி ஐக்ய நிலை" என்றும் கூறுகிறோம்.
-
- Another explanation made them to understand this concept. It is the example of gold and the ornament explained by Dr.Pradheepkumar.

- From this the concept of male-femaleness in Universal pattern and self has been explained. They understood the depth meaning of Sakthy who is being addressed in Lalitha Sahasranamam.

- Can Shivam the conscious alone has the right to correct Sakthy? - A vallid question:

---

**2**.4.2011 THEETHIPALAYAM CAC

அர்த்தம் என்ற கோட்பாட்டை விளக்கினோம்.
வேலைக்கு வரும் முன் இப்பெண்கள் வாழ்க்கையில் அர்த்தம் என்று வகுக்கப்பட்ட அனைத்தும் இருந்ததா-இல்லையா? இப்போது எப்படி அவர்கள் வாழ்க்கைத் தரம் இருக்கிறது? என்று அலசப்பட்டன.
அப்போதும் இப்போதும் மனதில் சந்தோஷம் இருக்கிறதா? என்று கேட்டோம். இல்லை என்றால் அதன் காரணத்தை ஆராய யோசிக்கச் சொன்னோம்.
இளையான் குடி மாறனாரின் வாழ்க்கை வரலாறு சொல்லப்பட்டது. குழந்தைப் பேற்றைக் கூட சேவைக்காகத் தியாகம் செய்த அவர் குடும்பம் பின்னர் உணவு,உடை, இடம் ஆகிய மூன்றையும் தியாகம் செய்த நிலையை இப்பெண்கள் உணர ஒருவாரம் காலம் தரப்பட்டது. அவர் வாழ்க்கையில் எதையெல்லாம் சேவையின் பொருட்டுத் தியாகம் செய்தார் என்ற கேள்வியைக்

கேட்டிருக்கிறோம். பதில் அடுத்த வாரம் வரும்!

---

மூர்கநாயனார் - [அர்த்தம்-காமம் விளக்கத்துடன் தரப்பட்டது] PRESENTED ON 3.4.2011 IN TIRUPUR CAC
வாழ்க்கையின் அடிப்படைத் தேவைகளான உணவு-உடை-இடம் ஆகியனவற்றை சம்பாதித்தவுடன் அவற்றில் ஆடம்பரங்களையும் வகைகளையும் எதிர்பார்ப்பது காமம். அதில் தவறில்லை. ஆடம்பர வாழ்விற்கு நேர்மையாக உழைக்க வேண்டும். தீய வழியில் செல்லும் போது கிடைக்கும் வசதிகள் லக்ஷ்மி அல்ல. இவ்விடத்தில் லக்ஷ்மி என்பது உண்மையான உழைப்பின் மூலம் கிடைக்கும் ஒவ்வொரு பலனும் தான் என்பது விளக்கப்பட்டது. அதில் அஷ்டலக்ஷ்மிகளின் தன்மை விளக்கப்பட்டது. [உழைப்பால் கிடைத்த தரமான சுவையான வகைவகையான உணவு - அன்னலக்ஷ்மி, உழைப்பில் கிடைத்த வெற்றி விஜயலக்ஷ்மி என விளக்கங்கள் தரப்பட்டன].
மூர்கநாயனார் - [அர்த்தம்-காமம் விளக்கத்துடன் தரப்பட்டது]
வாழ்க்கையின் அடிப்படைத் தேவைகளான உணவு-உடை-இடம் ஆகியனவற்றை சம்பாதித்தவுடன் அவற்றில் ஆடம்பரங்களையும் வகைகளையும் எதிர்பார்ப்பது காமம். அதில் தவறில்லை. ஆடம்பர வாழ்விற்கு நேர்மையாக உழைக்க வேண்டும். தீய வழியில் செல்லும் போது கிடைக்கும் வசதிகள் லக்ஷ்மி அல்ல. இவ்விடத்தில் லக்ஷ்மி என்பது உண்மையான உழைப்பின் மூலம் கிடைக்கும் ஒவ்வொரு பலனும் தான் என்பது விளக்கப்பட்டது. அதில் அஷ்டலக்ஷ்மிகளின் தன்மை விளக்கப்பட்டது. [உழைப்பால் கிடைத்த தரமான சுவையான வகைவகையான உணவு - அன்னலக்ஷ்மி, உழைப்பில் கிடைத்த வெற்றி விஜயலக்ஷ்மி என விளக்கங்கள் தரப்பட்டன].

மூர்கநாயனார் ஏன் சூதாடினார்?
அவரது சூதாட்டத்துக்கும், மஹாபாரத சகுனியின் சூதிற்கும் என்ன வித்யாசம்?
தீய வழியில் பொருள் சம்பாதித்து அதன் மூலம் ஆன்மீக சேவை செய்தால் மட்டும் செய்த பாவகர்ம பலன் தீருமா? சரி பாவம் கொண்ட தொழிலில் இருந்து விடுபட்டு, நேர்மையான வழியில் வாழ என்ன பண்ணலாம்? எந்நிலையில் ப்ரார்த்தனை செய்தால் அது கிடைக்குமா?

---

3.4.2011, Presented by Mr.ArulBalaji in Chennai, AlwarThirunagar CCC

மனதில் இருந்து எப்படி தேவையற்ற எண்ணங்களை அகற்ற வேண்டும்?
செயல்முறை விளக்கம்:
வெற்றுக் காகிதத்தை எடுத்துக் கொள்க.
அதில் எப்படி வேண்டுமானாலும் கிறுக்கச் சொல்க.
அடுத்து ரப்பர் தருக.
கிறுக்கியதை முடிந்த மட்டும் அப்படியே அழித்துக் காகிதத்தை சுத்தம் செய்யச் சொல்க.

விளக்கம்:
காகிதம் என்பது மனம். அதில் கிறுக்குதல் என்பது இஷ்டத்துக்குத் தேவையில்லாத எண்ணங்களை ஏற்படுத்துதல். ரப்பர் என்பது அறிவு, அதை விழிப்புணர்வுடன் வைத்து அழிப்பது என்பது அறிவால் விழிப்புணர்வால் அவ்வெண்ணங்களை அகற்றுதல்.

பின்னர் மீண்டும் அத்தாளில் நல்ல விஷயங்களையோ படங்களையோ நிரப்பச் சொல்க.

விளக்கம்:

அறிவாலும் விழிப்புணர்வாலும் மீண்டும் மனதில் நல்ல விஷயங்களை வைக்க வேண்டும் என்ற கருத்தை உணர்த்த வேண்டும்.

**3.4.2011, MYSORE CAC**

***Questions answered by Dr.Madeswaran through phone:***

1. How to control the anger?
2. How to make use of our travelling time?
3. How to make our mind to enjoy a work which is being hated by it?

---

**4.3.2011**

**M.Ganesan asked this question:**

Why there are only 63 nayanmars?

Don't we have any other people after them till today?

Why we have to take them as the role models?

---

8.4.2011-KAMAKSHIPURAM CAC

ஆண்களுக்குப் பெண்களை விட மெய்யுணர்வு குறைவே, பெண்கள் தான் உயர்ந்த மெய்யுணர்வில் வாழ்கிறார்கள்.- ஒரு பெண்மணியின் ஆணித்தரமான கருத்து இது.

விளக்கம்: இது ஏற்புடையது அல்ல.மெய்யுணர்வு நிலைக்குச் செல்ல ஆண்-பெண் பேதமே இல்லை. அப்படி பேதம் பார்த்தால் அதில் மெய்யுணர்வு என்ற ஒன்றே இல்லை. பெண்கள் தங்கள் குடும்பம் என்ற வட்டத்துக்குள் அதிகம் மெய்யுணர்வினை உணர்கிறார்கள். வேலைக்குச் செல்லும் ஆண்கள் வெளியுலகில் அதை உணர்கிறார்கள். இருபாலரும் அந்த இரு வட்டங்களைத் தாண்டி சர்வலோகம் ப்ரபஞ்சம் என்ற விரிவான பரந்துபட்ட நிலைக்கு வரம் போதே மிக முழுமையான மெய்யுணர்வைப் பெறுகிறார்கள். இதற்கு இருபாலரும் ஆன்மீக சாதனைகளை மேற்கொள்ளுதல் அவசியம். அதற்காகவே இல்லற தர்மம் பாரத நாட்டில் உருவாகித் துணை நிற்கிறது.

அறுபத்தி மூவரில் ஏன் அதிகம் ஆண்களே உள்ளனர்? பெண்களால் அப்பதவியை அடைய முடியாதா?

ஆண்கள் என்பதை உருவம் வைத்துப் பார்க்க வேண்டாம். ஆண் தன்மையான மெய்யுணர்வின் உருவகமே அவர்கள். மேலும் ஒரு மனிதன் ஆணாக உருவாகிப் பிறக்கும் போது, பிறப்புச் சுழற்சியை விட்டு வீடு பேற்றுக்கு வெளியேற ஒரு வாய்ப்பு தரப்படுகிறது. ஆனால் இதை ஆண்கள் உணர்ந்து பயன்படுத்துகிறார்களா என்பது அவரவர் நிலையில் தான் தெரியும்.
அறுபத்தி மூவரில் பலர் ஆண்கள் என்பதை இரண்டு பார்வையில் காணலாம். ஒன்று ஆண் தன்மையை அடைந்து மனிதனுள் இருக்கும் பெண் தன்மையான சக்தி மெய்யுணர்வாக மாறியுள்ளது என்பதன் அடையாளம். மற்றொன்று இந்த நாயன்மார்கள் தங்களுக்கு ஆண் உருவம் கிடைக்கப் பெற்றதன் உள் அர்த்தத்தை உணர்ந்து அதன் பயனை அடைந்து விட்டனர்.
இவர்களின் வாழ்க்கையில் இவர்களுக்கு உறுதுணையாய் வாழ்ந்த அவர்தம் மனைவியரும் உயர்ந்த மெய்யுணர்வை அடைந்து தம்பதியினர் இருவருமே சிவானந்தத்தை அனுபவித்தனர் என்றே அர்த்தம்.

ஆனால் இருவரில் யார் அதற்கு உறுதுணையாக இல்லாவிட்டாலும் மற்றவர் தன் ஆன்மீக சாதனையை நிறுத்தவில்லை என்பதில் கவனம் கொள்ள வேண்டும்.
"என் வீட்டில் உள்ளவர்களுக்கு ஆன்மீகத்தில் எல்லாம் ஈடுபாடு இல்லை, அதனால் கல்யாணத்துக்குப் பிறகு ஆன்மீக சாதனைகளை நானும் விட்டு விட்டேன் என்று" கூறுவது அபத்தம்! அவரவர் பசிக்கு அவரவர் உண்ண வேண்டும்! அவரவர் பிறவித்தளையை அறுக்க அவரவர் ஆன்மீக சாதனை செய்து கொள்ளுதல் வேண்டும்.

---

9.4.2011 - SAIBABA COLONY CAC

பிறப்பு அறுத்த நான் உடனே இவ்வுடலை விட்டு விட முடியுமா?
அது அவரவர் பக்குவத்தைப் பொறுத்ததே! அமெரிக்கா செல்ல விசா எடுக்கிறோம். அடுத்த மூன்றாம் மாதம் முதல் தான் விசா பயன்பாட்டிற்கு வருகிறது என்றால், அதற்குள் ஊரில் உள்ள கடமைகளை முழுமையாக முடிக்கக் காலம் தரப்படுகிறது என்று அர்த்தம். அதுவுமே விசா பயன்பாட்டுக்கு வந்த நாள் அன்றே எல்லோராலும் விமானம் ஏற முடிகிறதா? இல்லை! அப்போது டிக்கட் கிடைக்கிறதோ அதுவரை காத்து இருக்க வேண்டி இருக்கிறதே?!
அதுபோலத் தான் பிறப்பை அறுக்கும் ஒருவர் பற்றற்ற நிலையில் தாங்கள் இப்பிறவில் சங்கல்பம் செய்து வைத்திருக்கும் அனைத்து கடமைகளையும் பூர்த்தி செய்த பிறகே உடலை விட முடியும். மெய்யுணவில் வாழ்ந்து கடமைகளைப் பூர்த்தி செய்து அமைதியாக வாழும் போது அவசியம் தான் உடலை விடவேண்டிய காலம் வருவதை உணரவும் முடியும்.

பூக்கள் உணர்த்தும் உண்மை:
பூக்கள் எப்படித் தன் செடிகொடிகளில் இருந்து நம் கைகளால் விடுபட்டு, பூஜையின் மூலம் இறைவனை அடைகிறதோ, அப்போது நம் எண்ணங்களையும் இறைவனிடம் சேர்த்து சேவை செய்கிறதோ, அது போல பிறவிச்செடியில் இருந்து நாம் குருவால் பறிக்கப்பட்டு ஆன்மீக சாதனை மூலம் சேவைகள் செய்து மெய்யுணர்வாகிய பிறப்பற்ற தன்மையை அடைவதையே பூக்கள் உணர்த்துகின்றன.

கழற்சிங்க பல்லவரின் அரசி திருவாரூரில் பூவை மோர்ந்து பார்த்தது பாவமா?
பூக்கள் உணர்த்தும் உண்மையை அறிந்த நமக்கு இதற்கு எளிமையான பதில் கிடைக்கிறதே! திருவாரூர் என்பது இல்லறத்தார் மிக உயர்ந்த மெய்யுணர்வில் நின்று தர்மம் செய்யக்கூடிய தியாக வாழ்க்கையின் உருவகம். அவ்விடத்துக்குப் பல்லவ மன்னன் தன் மனைவியுடன் வருகிறார். தன் மனைவி பூவை மோந்து பார்த்ததைக் கண்டு செறுத்துணை நாயனார் அவர்தம் மூக்கை வெட்டினார் என்பது பூவின் வாசனை போல பிறவியின் வாசனையால் மீண்டும் அடுத்த பிறப்பு ஏற்படும் நிலையில் இருந்து அவரை விடுவித்தார் என்ற உளர்த்தமே கொள்க. அதை அவர் குரு நிலையில் செய்து விட்டார்.
கணவனாகிய அடுத்த குருவானவர் ஐம்புலன்களையும் உயர்ந்த நிலையில் அடக்கி மெய்யுணர்வே வடிவாகியத் தியாகமாகத் தன் மனைவிமாற ஆன்மீக உணர்ச்சியைத் தந்துள்ளார். அதை அங்கங்களை பங்கம் செய்ததாக உருவகம் சேக்கிழாரால் காட்டப்படுகிறது.

மிக உயர்ந்த மெய்யுணர்வின் நிலையில் சிவமாகவே மாறிய ஒருவர் அநியாயத்தைக் கண்டிப்பார். அதில் அரசன், ஆண்டி என்ற பேதம் அவர்களுக்கு இல்லை.

"நீ செய்த காரியத்துக்கு உன் மூக்கையே அறுத்திருக்க வேண்டும்!" என்று அரசி முன் மிக உயர்ந்த மெய்யுணவில் செறுத்துணையார் அவரது தவற்றை உணர்த்தி இருக்கிறார்.

பல்லவ மன்னனோ, "அவரோ மூக்கைத் தான் அறுக்க முற்பட்டார், நானோ பூவை எடுத்த கையையும், எடுக்கச் சொன்ன கண்களையும், அலங்கரிக்கச் சொன்ன உன் கூந்தலையும் அறுத்திருப்பேன்!" என்று கண்டித்திருக்க வேண்டும்.

---

எனக்கு ஆடம்பர வாழ்க்கையில் ஆர்வம் இல்லை. ஆனால் என் மனைவியும் குழந்தையும் ஆடம்பரத்தை விரும்பும்போது நான் எப்படி அதைக் கையாள்வது?

அர்த்தம் - காமம் என்ற இரண்டு வாழ்க்கையின் நிலைகளில் இருந்து அனுபவிக்கும் சுகபோகங்களுக்கு எல்லைக் கோட்டை யார் வரைவது?